# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 13 (27-03-1998) வெள்ளிக்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்: 103


# 8 அப்பாவித் தமிழர் குண்டு வீச்சில் பலி!

## வட்டக்கச்சியில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, மார்ச் 27

ஸ்ரீலங்கா வான்படை "கிபிர்" விமனங்கள் நேற்றுக் காலை 7.58 மணியளவில் வன்னி நிலப்பரப்பை வட்டமிட்டு நடத்திய தாக்குதலில் வட்டக்கச்சி, பெரியகுளம் பகுதியில் எட்டு அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் உயிரிழந்தோர் விவரம் குறித்துப் புலிகள் அறிவித்துள்ளனர்.

★ யாழினி என அழைக்கப்படும் வேலாயுதம் மங்கையர்க்கரசி (வயது 18) வட்டக்கச்சி, பெரியகுளம், உயர்தர வகுப்பு மாணவி.

★ கிருஷ்ணசாமி வள்ளிப்பிள்ளை (வயது 60) — வரணியில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சியில் வசிப்பவர்.

★ தனபாலு (வயது 55) — பழைய வட்டக்கச்சி.

★ நமசிவாயம் பாலசிங்கம் (வயது 58) — பெரியகுளம், வட்டக்கச்சி.

★ முத்தையா வசந்தகுமாரி (வயது 25)

★ செல்லப்பா தங்கவேலு (வயது 45) — கண்டாவளை.

★ தங்கவேலு சிவபாக்கியம் (வயது 43)

★ இராமநாதன் செல்லம்மா (வயது 50) — முரசுமோட்டை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் விஜயதிஸ்ஸ (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

துப்பாக்கி தற்செயலாக வெடித்ததினால் இவர் காயமடைந்ததாக இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# யாழ். நகரப்பகுதியில் நேற்று கிரனேட் வெடிப்பு

## இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். நகரப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கிரனேட் குண்டு வெடிப்பில் இருவர் காயம் அடைந்தனர்.

யாழ். நவீன சந்தைக்கு முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் நேற்று நண்பகல் 12.30 மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த சி. சிவலிங்கம் (வயது 55), அரியாலையைச் சேர்ந்த பெற்ரோன் பரமசாமி (வயது 22) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவார்.

கிரனேட் தாக்குதல் இடம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குவில், கோண்டாவில் பகுதிகள் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொக்குவில், கோண்டாவில் பகுதிகள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன. காலை 5 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

வீடு வீடாகத் தேடுதல் நடத்திய படையினர் சுமார் 500 பேரை கொக்குவில் பொற்பதி பிள்ளையார் கோயிலுக்கு அழைத்து வந்தனர். அங்கே ஒவ்வொருவரும் தீவிரமாக விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அப் பகுதிகளில் இருந்து வெளியேற எவரும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் 9 மணியின் பின்னர் அரச ஊழியர்கள் குழுக்கள் குழுக்களாக வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(இ-109-86-135–27)

# கொழும்பில் தமிழர்கள் கைதாவதை தடுக்க இந்தியா உதவ வேண்டும்!

## இந்தியத் தூதரிடம் இந்து மாமன்றம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

இந்துப் பூசகர்கள் மற்றும் தமிழர்கள் கொழும்பில் கைது செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் இந்திய தூதுவரிடம் கேட்டுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தூதுக்குழு ஒன்று நேற்று மாலை 3 மணியளவில் இந்தியத் தூதுவர் மேனனுடன் நடத்திய பேச்சுக்களின் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தது.

தமிழர்கள் என்றபோர்வையில் கொழும்பில் நடக்கும் கைதுகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள் அனைவரும் இந்தியாவுக்கு வரவேண்டிய நிலையே ஏற்படும்.

ஆகவே இந்த விடயத்தில் தலையிட்டு இந்திய அரசாங்கம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துத் தமிழர்கள் கைதாவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று தூதுக் குழுவினர் இந் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கைதான இந்து குருமார் நேற்று விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 27

நேற்று முன்தினம் கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இந்துக் குருமார் அவரது உதவியாளர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதமகுரு மற்றும் உதவியாளர்கள் —

கப்பித்தாவத்தை பிள்ளையார் கோயில் பிரதமகுருவின் மகன் அவரது பிள்ளைகள் — ஆகியோரே கைது செய்யப்பட்டிருந்தனர்.'

இவர்களை விடுதலை செய்யுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் ஜனாதிபதியைக் கோரியிருந்தனர்.

எம். சிவசிதம்பரம் நேற்று சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு பேசி இருந்தார்.

இவற்றை அடுத்து 'அவர்கள் நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

(இ-3)

# யாழ். வர கப்பல் வசதி கோரி வவுனியாவில் போராட்டம்!

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதி செய்யுமாறு கோரி இன்று காலை 9.00 மணிக்கு வவுனியா செயலக திட்டமிடல் பணிமனைக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி வவுனியாவில் தங்கியுள்ள அரச ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள்இணைந்து இந்த போராட்டத்தில் ஈடுபடுவர்.

இது தொடர்பாக வவுனியா அரச அதிபர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஆகியோருக்கு மகஜர்கள் கையளிக்கப்படவிருக்கின்றன.

நாளை வவுனியா வரும் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநருக்கும் இவர்கள் மகஜர் கையளிக்கவிருக்கின்றனர். (இ–164–3)

# பேச்சுவார்த்தையில் பங்குபற்ற புலிகள் விருப்பம் தெரிவிக்கலாம்!

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

'இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விடுதலைப் புலிகள் விரும்பக்கூடும்'.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான ரணில் விக்கிரம்சிங்க தெரிவித்தார்.

ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் மாறாக இருக்கமாட்டார்கள் என்பதற்கான பல்வேறுசமிக்ஞைகளும் அறிகுறிகளும் இருக்கின்றன. இதில் அவர்களின் தந்திரோபாயம் என்னவென்று இன்னமும் தெரியவில்லை. இந்த சமிக்ஞை அரசாங்கத்துக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா நகரையும், கிளிநொச்சிநகரையும் இணைக்கும் நெடுஞ்சாலையைத் திறப்பதற்கான வன்னிப் பிராந்திய யுத்தம் மேலும் தீவிரமடையக் கூடிய சாத்தியம் இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# முல்லைக் கடற் பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

## இருவரைக் காணோம்

வவுனியா, மார்ச் 27

முல்லைத்தீவு கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

முல்லைத்தீவில் இருந்து நேற்று அதிகாலை 1. 45 மணியளவில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து மீனவர்கள் வலைகளை விட்டு கரை திரும்பினர்.

இதில் இருமீனவர்கள் காணாமற்போயுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு எருக்கலையைச் சேர்ந்த திருச்செல்வம் திவாகரன், வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த பிலிப்பையா தேவராசா ஆகிய மீனவர்களே காணாமற் போனவர்களாவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காருண்யபுஷ்பம் இராமலிங்கம்

திருமதி காருண்யபுஷ்பம் இராமலிங்கம் 26-03-98 அன்று காலை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் சிங்கப்பூர் தியாகராஜாவின் புதல்வியும், திரு. இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், இரஞ்சிதன் (யாழ். பல்கலைக்கழகம் 2 ஆம் வருடம் A வர்த்தகம்), இராஜ்மோகன் (கோபி), கிருஷாந்தி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. இரஞ்சிதன்
(மகன்)

(2 ஆம் வருடம் A வர்த்தகம் யாழ். பல்கலைக்கழகம்)
திருமதி S. செல்வராஜா,
99, முகத்துவாரம் வீதி,
கொழும்பு – 15

(சி/3217)

## திருமதி செல்லம்மா இராசேந்திரன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது கொழும்பில் வசித்தவரும் காலஞ்சென்ற இளைப்பாறிய தபால் அதிபர் சுப்பையா இராசேந்திரனின் அன்பு மனைவியுமான செல்லம்மா இராசேந்திரன் 25-03-98 அன்று காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் சகுந்தலா, விக்னேஸ்வரன், சுசிலா, சரோஜா, சாரதா, சந்திரா, சுகுணா, கார்த்திகேயன், காங்கேயன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகேசு, ஸ்ரீபுவனதேவி, சோமசுந்தரம், தம்பிராஜா, நடராஜன், விசுவநாதன், பதஞ்சலி மனோகரன், நகுலாம்பிகை, ராஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரா விசுவநாதன்
(மகள்)

'றோகினி',
மானிப்பாய்.

(54327)

## சோமசுந்தரம் இரத்தினசபாபதி

(முன்னாள் உப்புக் கூட்டுத்தாபனம்)

கோப்பாய் வடக்கு பூதர்மடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் இரத்தினசபாபதி 24-3-98 இல் குளியாப்பிட்டியாவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும் V. S. நடராசா (சட்டத்தரணி), காலஞ்சென்ற சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்பு மருமகனும், சூரியகுமாரி (தேவி) யின் அன்புக் கணவரும், கௌசல்யா, யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமார் (இலங்கை வங்கி, நாத்தாண்டியா), தவராசா (ஆசிரியர், மகாவித்தியாலயம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபி கிருஷ்ணா, வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி மீனலோஜினி தர்மராஜா (லண்டன்), திருமதி இராஜேஸ்வரி இராஜகாந்தி, சிவராசா, சண்முகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-3-98 குளியாப்பிட்டியில் அன்னாரது மகள் யசோதாவின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவராசா

பூதர்மடம்,
கோப்பாய் வடக்கு.

(54346)

## அப்பாத்துரை நாகரத்தினம்

(இரத்தினம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகத்தை தற்போதைய வசிப்பிடமாக கொண்டவருமாகிய அப்பாத்துரை - நாகரத்தினம் அகாலமரணமடைந்தார்.

அன்னார் நாகரத்தினம் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சிவப்பிரகாசம், கனகம்மா, அன்னம், நாகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் சுந்தரமூர்த்தி (லண்டன்), சிவபாதம் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (கனடா), சிவகுமார் (ஜேர்மனி), வரதலட்சுமி (கனடா), நற்குணதேவி ஜேர்மனி), சற்குணதேவி (கொக்குவில்), தனலட்சுமி (சுன்னாகம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 – 3 – 98 நண்பகல் 12. 00 மணியளவில் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. தனலட்சுமி
(மைத்துனி)

புகையிரத நிலையத்துக்கருகில்,
சுன்னாகம்.

(54333)

## விளையாட்டு கழகங்களிடமிருந்து விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவுக்குஉட்பட்டவிளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற உள்ள தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்என கோப்பாய்ப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ–9)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தொலைக்கல்வி தொடர் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## சில்லாலையில் சங்கக்கிளை திறக்கப்படும்

சண்டிலிப்பாய், மார்ச் 27

பண்டதரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சில்லாலை சந்தை கிளை விரைவில் திறக்கப்படவுள்ளது. இக் கிளைக் கட்டடத்தில் அவசிய திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

(ஐ-135)


யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி விதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
சரத்குமார்
(இரு வேடங்களில்)
தேவயானி
நடித்த
**சூரியவம்சம்**
அடுத்த வெளியீடு
**குருதிப் புனல்**
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
(54326)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
எம். ஜி. ஆர். நடித்த
**மீனவ நண்பன்**
சனி, ஞாயிறு
மோகன் - அம்பிகா
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இதயக் கோயில்**
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 – 212223
(54075)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
27 - 03 - 98 முதல்
28 - 03 - 98 வரை
அர்ஜுன் - மதுபாலா
நடித்த
**ஜென்றில்மேன்**
29 - 03 - 98 முதல்
கரன் - குஷ்பு
நடித்த
**கலர்கனவுகள்**
10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)


## வணிகர் கழகம் நல்லூர் அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

பேரன்புடையீர்!

**29-03-1998** காலை 10.00 மணிக்கு (பழைய நேரம்) நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நல்லூர் வணிகர் கழக அங்குரார்ப்பணக் கூட்டமும் புதியநிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளன.

தயவு செய்து நல்லூர் வணிகர் கழகத்துள் இயங்கும் அனைத்து வர்த்தகர்களையும் தவறாது கலந்து கொண்டு நிர்வாகிகள் தெரிவில் இடம்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமைப்பாளர்கள்,
நல்லூர் வணிகர் கழகம். (சி/3216)

## பிற்போடப்பட்டுள்ளது

திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.

### பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கம் 28-03-98 சனிக்கிழமை அன்று யாழ். மாநகரசபை முதல்வர்

திருமதி சறோஜினி யோகேஸ்வரன்

அவர்களைக் கௌரவிப்பதற்கென நடத்தவிருந்த

**மதிய போசன விருந்து**

தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

(54352) - செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

யா/ செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை ஆசிரியர்

### நடராசா அம்பிகைபாகன்

அவர்களின் திடீர் மறைவு குறித்து உள்ளம் நெகிழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ செம்பியன்பற்று
அ. த. க. பாடசாலை.

(சி/3213)

## கண்ணீர் அஞ்சலி

### நடராசா அம்பிகைபாகன்

(ஆசிரியர் யா / செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை ஆசிரியர்ப் பயிலுனர் 1993 / 95 கரவெட்டி மத்திய நிலையம்)

25 – 03 – 1998 அன்று இறைபதம் அடைந்த எமது ஆசிரிய நண்பன் அமரர் நடராசா அம்பிகைபாகன் அவர்கட்கு கண்ணீர் அஞ்சலியினையும், அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
போதனாசிரியர்கள், ஆசிரியர்ப்பயிலுனர்கள்
1993 / 95
தொலைக்கல்வி மத்திய நிலையம்
கரவெட்டி

(சி/3214)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு பாலசிங்கம்

(காவலாளர், வலிகிழக்கு ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கதிரவேலு பாலசிங்கம் 26-3-98 காலை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி கதிரவேலு மற்றும் தங்கம்மா (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மகனும், தோப்பு அச்சுவேலி சீவரத்தினம்-சரோஜினி தம்பதிகளின் அன்பு மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், லக்ஸ்மன், மகீசன், விதுர்சன், இந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடேசலிங்கம், காலஞ்சென்ற பரமலிங்கம் (மட்டுவில்), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சண்முகலிங்கம், சரஸ்வதி (வவுனியா), குணலட்சுமி (மாளிகாவத்தை), ரேவதி (ஜேர்மனி), சந்திரமதி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சத்தியசீலன் (மல்லாவி), சத்தியதேவி (ஜேர்மனி), கெங்காதேவி (நீர்வேலி), குணசீலன் (சுவிஸ்), ஞானசீலன் (ஜேர்மனி), திரிபுரசுந்தரம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 98-03-26 பிற்பகல் நீர்வேலி தெற்கில் நடைபெற்றன. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உமாதேவி
(மனைவி)

நீர்வேலி கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி.

(54353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றுவாண்டா இனப் படுகொலைகளை தடுக்க உலக சமூகம் தவறிவிட்டது!

## கிகாலியில் கிளின்ரன் கவலை தெரிவிப்பு

கிகாலி, மார்ச் 27

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு றுவாண்டாவில் இடம்பெற்ற மிகமோசமான இனப்படுகொலைகளைத் தடுக்க சர்வதேச சமூகம் தவறிவிட்டது.

ஆபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் மேற்கண்டவாறு ஒப்புக் கொண்டுள்ளார்.

றுவாண்டா தலைநகர் கிகாலி விமான நிலையத்தில் படுகொலையில் இருந்துஉயிர் தப்பிய ஹூட்டு இனத்தவர்களை அதிபர் சந்தித்தார்.

சோகமே உருவான சூழ்நிலையில் அந்த மக்களுடன் கிளின்ரன் உரையாடினார்.

படுகொலைகள் தொடங்கியவுடனேயே அதனை நிறுத்த விரைவான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டோம். அகதிகள் தங்கியிருந்த முகாம்கள் கொலையாளிகளுக்குப் பாதுகாப்பான இடங்களாக மாறியதைநாம்அனுமதித்திருக்கக் கூடாது — என்று கிளின்ரன் அங்கு தெரிவித்தார்.

றுவாண்டா இனப்படுகொலை தொடர்பான அமெரிக்காவின் பதில் நடவடிக்கைகள் தோல்வி கண்டதை அமெரிக்க அதிபர் இவ்வாறு வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

றுவாண்டா மக்கள் அதிபர் கிளின்ரனுக்கு அமோக வரவேற்பளித்தனர்.

(ஐ)

## கடத்தப்படவிருந்த 4 ஆயிரம் பாம்புகள் உயிருடன் மீட்பு!

பாங்கொக், மார்ச் 27

தாய்லாந்தின் அரச அதிகாரிகள் சுமார் 4 ஆயிரம் உயிருள்ள பாம்புகளைக் கைப்பற்றி உள்ளனர்.

பொதி செய்யப்பட்ட நிலையில் சீனாவிற்கு அனுப்புவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த பாம்களே மீட்கப்பட்டுள்ளன.

சீனாவில் பாம்புகளை மருத்துவத்திற்கும் உணவிற்கும் பயன்படுத்துவதனால் இவற்றிற்கு அங்கு அதிக கிராக்கி உள்ளது. இதன் மூலம் பெரும் தொகைப் பணம் சம்பாதிக்க முடியும்.

அதிகாரிகளிடம் சிக்கிய போது இப் பாம்புகள் பிளாஸ்ரிக் பைகளில் காற்றுப்புக முடியாதவாறு அடைக்கப்பட்டு பெட்டிகளில் கட்டப்பட்டிருந்தன. பாம்புகளைக் கடத்தும் சட்டவிரோதக் கடத்தற் காரர்கள் அதன் மூலம் பெருந்தொகைப்பணத்தைச் சம்பாதிக்கிறார்கள்.

(ஐ-ரீ)

## இந்திய ஜனாதிபதி உரை

புதுடில்லி, மார்ச் 27

வறுமையை ஒழித்து, வசதியற்றவர்களை வாழ வைப்பதற்காக உணவுக்கு உத்தரவாதம், வேலைவாய்ப்பு உருவாக்கம், உறைவிடம் ஆகிய மூன்று திட்டங்கள் முனைப்புடன் செயற்படுத்தப்படும்.

இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளினதும் கூட்டுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய பாரதீய ஜனதாக் கூட்டணி அரசின் கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக ஜனாதிபதியின் உரை அமைந்திருந்தது.

(ஐ)

# வாஜ்பாய் அரசு மீது இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு!

## தெலுங்கு தேசம் கட்சியே முடிவை நிர்ணயிக்கும்!

புதுடில்லி, மார்ச் 27

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு இன்று நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர் கொள்வுள்ளது.

காலையில் நாடாளுமன்றம் கூடியதும் பிரதமர் வாஜ்பாய் தமது அரசு மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுவார்.

இன்றைய நம்பிக்கை வாக்கெடுப்பில் வாஜ்பாய் அரசு வெற்றியீட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் புதிய அரசின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக தெலுங்கு தேசம் கட்சி உள்ளது.

நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதாவுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்குமாகச் சேர்த்து 267 இடங்கள் உள்ளன. 540 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க இந்த பலம் போதாது. எனினும் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் இன்றைய வாக்கெடுப்பின் போது நடுநிலை வகித்தால் பாரதீய ஜனதாக் கூட்டணி தப்பிப்பிழைக்கும்.

இதற்கிடையில்—

வாக்கெடுப்பில் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றித் தமது கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை என்று சந்திரபாபு நாயுடு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். தெலுங்கு தேசம் கட்சி நடுநிலைமை வகிக்கும் என்று ஏற்கனவே வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

இதேவேளை—

நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதை ஒட்டி பாரதீய ஜனதாக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று கொறடா உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

## பி.ஜே.பி. அரசில் சேர்வதில்லையென நாயுடு, பாரூக் அப்துல்லா முடிவு

புதுடில்லி, மார்ச் 27

பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று தெலுங்கு தேசம் கட்சியும், ஜம்முகாஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியும் அறிவித்துள்ளன.

தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும் ஆந்திர மாநில முதலமைச்சருமான சந்திரபாபு நாயுடுவும், தேசியமாநாட்டுக்கட்சியின் தலைவர் பாரூக் அப்துல்லாவும் செய்தியாளர் மாநாட்டில் இதனைக் கூட்டாக அறிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கப்போவதில்லை என்றும் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

ஏனைய தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் புதிய முன்னணி ஒன்றை அமைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று தேசிய மாநாட்டுக் கட்சித்தலைவர் பாரூக் அப்துல்லா தெரிவித்தார். (ஐ-ரீ)

## 'காஸ்' அடுப்பு பாவிக்க ஹஜ் பயணிகளுக்கு தடை

றியாட், மார்ச் 27

ஏப்ரல் 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள மக்கா புனித யாத்திரையில் கலந்து கொள்வதற்காக 6 லட்சத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் சவுதிஅரேபியா போய்ச் சேர்ந்துள்ளனர். எனினும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது யாத்திரிகர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஹஜ் பயணிகள் தமது விடுதிகளில் வாயு 'காஸ்' அடுப்புகளைப் பயன்படுத்துவதை சவுதி அரசு இம்முறை தடை செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஹஜ் யாத்திரையின் போது மீனாவில் யாத்திரிகர்கள் தங்கியிருந்த கூடாரங்களில் தீப் பிடித்து நூற்றுக்கணக்கானோர் கருகி மாண்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

வாயு அடுப்பில் இருந்து பரவிய தீ காரணமாகவே அந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

(ஐ)

## பள்ளி ஆசிரியர், சிறுமியர் மீது இரு சிறுவர்கள் துப்பாக்கிச் சூடு!

### ஐவர் பலி! அமெரிக்காவில் கொடூரம்!!

வாஷிங்டன், மார்ச் 27

அமெரிக்காவின் ஆர்கன்ஸாஸ் மாநிலத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது இரு சிறுவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலியாகினர்.

பாடசாலையில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தோர் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இறந்தோரில் நால்வர் சிறுமிகள், ஒருவர் ஆசிரியர்.

11 வயதான ஒரு சிறுவனும், 13 வயதான ஒரு சிறுவனுமே இந்தத் துப்பாக்கித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

போர்ச் சீருடை அணிந்திருந்த இரு சிறுவர்கள் கிராமப் பாடசாலையில் தீப் பற்றி விட்டதாகக் கூறி எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்தனர்.

இதனால் கலவரமடைந்த ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலையை விட்டு வெளியேறினர். அச்சமயம் காட்டுப் பகுதிக்குள் மறைந்து இருந்து விட்டு ஆயுதங்கள் சகிதம் திடீரென வெளிப்பட்ட அச்சிறுவர்கள் மாணவர்கள் மீதும் ஆசிரியர் மீதும் கண்டபடி சுடத் தொடங்கினர்.

அவர்களிடம் ஒன்பது ரைபிள்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலக அரங்கில்

ஆபிரிக்காவில் விஜயம் மேற்கொண்டுள்ள அதிபர் கிளின்ரனுக்கு இச்சம்பவம் தொடர்பாக உடனடியாகத் தகவல் பறந்தது.

அதிபர் கிளின்ரன் முன்னர் ஆர்கன்ஸாஸ் மாநிலத்தின் ஆளுநராக இருந்தார்.

இச் சம்பவம் [illegible] பாக பூரண விசாரணை நடத்துமாறும், சிறுவர்களின் இத்தகைய செயல்கள் குறித்து ஆய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்குமாறும் கிளின்ரன் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் வன்முறைக் கலாசாரம் பரவி வருவதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக ஆர்கன்ஸாஸ் மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார்.

திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பனவற்றில் வன்முறைக் காட்சிகளை சிறுவர்கள் தாராளமாகப் பார்க்க முடிகிறது. இது அவர்களிடையே மனித விழுமியங்களைச் சாகடித்து விடுகிறது என்றும் அவர் சொன்னார்.

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வன் செயல்கள் அமெரிக்காவில் அடிக்கடி இடம் பெற்றுவருகின்றன.

இந்தச் சம்பவம் ஆர்கன் [illegible] மெரிக்க [illegible] அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தோனேசியர் ஊடுருவல்

## கரையோரப் பாதுகாப்பு மலேசியாவில் தீவிரம்!

மலேசியாவுக்குள் சட்டவிரோதமாகக் குடியேற முயற்சிக்கும் இந்தோனேசியர்களைத் தடுக்கும் முயற்சியாக கரையோரப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மலேசியா முடுக்கி விட்டுள்ளது.

நான்கு கடற்படைக் கப்பல்களும், முப்பது பொலீஸ் படகுகளும், நான்கு விமானங்களும் கரையோரக் காவற் பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கடந்த மூன்று நாள்களில் பெரும் எண்ணிக்கையான இந்தோனேசியர்களை ஏற்றி வந்த முப்பது படகுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

கரையோரக் காவல் பலப்படுத்தப்படுவதற்கு முன்னர் கடந்த ஜனவரி மாதத்தின் பின் சட்டவிரோதமாகக் குடியேறிய 18 ஆயிரத்து 500 இந்தோனேசியர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-ரீ)

## 'அல்உமாவே' பொறுப்பு

கடந்த மாதம் கோவையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களுக்கு தடை செய்யப்பட்ட அல் உமா இயக்கமே பொறுப்பு என்று சிறப்புப் புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

பத்தொன்பதுமுஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே அல்உமா இயக்கத் தலைவர் எஸ். ஏ. பாட்ச்சா திட்டமிட்டு இக்குண்டு வெடிப்புக்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு. சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களின் சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்

27 – 03 – 1998

## ஆதீன முதல்வர் அருளாசி

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபராக இருந்து ஓய்வுபெறும் திரு. செல்லத்துரை அவர்களை நன்றி கூறி கௌரவிக்கும் நிகழ்ச்சியை அறிந்து மன மகிழ்ச்சியடைகின்றோம். அதிபர் என்னும் சொல்லுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திரு. செல்லத்துரை அவர்கள். சீரான உடையும், துடிப்பான செயலும் எடுத்த இலட்சியத்தை சிறப்பாகச் செய்து முடிக்கும் ஆற்றலையும் கொண்டவர்.

மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியை தனது வளர்ச்சி போலக் கருதி இளவாலை ஊருக்கும், மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கும் புகழைத் தேடித்தந்த செயல் வீரன். அடக்கமும், அறிவும், அன்பும் கொண்ட அதிபரின் ஓய்வு எல்லோருக்கும் மன உளைச்சலைத் தந்தாலும் அவர் சமய, சமூகப் பணிகளில் மேலும் செயற்பட வேண்டும் என்று இறையருளை வேண்டி அவருடைய பணிக்கெல்லாம் உந்து சக்தியாக இருக்கும் அவரது துணைவியாரையும் வாழ்த்துகின்றோம்.

சைவப்புலவர் அதிபர் செல்லத்துரை அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்ந்து சமூகப் பணியும் சமயப் பணியும் ஆற்றவும் இறைவன் ஆசீர்வதிக்கவும் வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம்.
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## இனிது வாழி!

சீர்பூத்த கல்வி ஆசான்
திருசெல்லத் துரைஎன்கின்ற
பேர்பூர்த்த பண்பன், காணும்
பிள்ளைகள் அனைத்தும் தன்நற்
பார்பூர்த்த மக்களாகப்
பரிவுடன் அணைக்கும் ஞானத்
தார்பூத்த சிந்தையாளன
தபனன்போல் வாழி வாழி!
கருணையா சிரியனாகிக்
கவின்இள வாலை யூரில்
மருவுமெய் கண்டான்நாம
மகாவித்தி யாலயத்தின்
குருமணி அதிபராகிக்
குலவும்ஈர் பத்தேழாண்டு
பெருமுயர் பணிபுரிந்த
பெரியோய் பல்லாண்டு வாழி!
தமிழ்மொழி இலக்கியங்கள்
தழுவிய இலக்கணங்கள்
சமயசித்தாந்தச் செல்வம்,
தருதிருமுறை புராணம்
அமைவுறு மிதிகாசங்கள்
அடங்கிய புலவனாகி
இமயம்போல் சேவைதந்த
ஏந்தலே இனிதுவாழி!

அருட்கவி. சீ. விநாசித்தம்பி
(தலைவர், யாழ். இந்து சமயப் பேரவை)

## நல்வழிகாட்டிய ஆசான்


இன்று இளைப்பாறும் இளவாலை மெய்கண்டான் அதிபர் திரு. சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களைக் கடந்த 30 ஆண்டுகளாக அறிவேன். காரைநகர் ஈழத்து சிதம்பர மகா கும்பாபிஷேகக் காலத்தில் அன்பர் அமரர் இ. வைத்திலிங்கம் ஆக்கிய மணி ஓசை என்ற நாடகத்தில் இருவரும் சேர்ந்து நடித்தோம்.

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் சைவ நெறிக் கழக சமயச் செயற்பாடு நிகழ்ச்சிகளை திரு விநாயகரத்தினம் அவர்களுடன் இவரும் சேர்ந்து நடத்தியமை எமக்கும் பாடசாலைகளுக்குமிடையில் நடத்தப்படுகின்ற சமய நெறிச் செயற்பாட்டுக்கு சைவ சமய மாணவரின் சைவப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்க வழிகாட்டியாக அமைந்திருந்தது; இவர்களது சிறந்த வழிகாட்டலுக்கு ஏற்புடையதாகவிருந்தது.

தூய வெண்ணிற ஆடை, மலர்ந்தமுகம், சினத்தையே அறியாத உள்ளம், செய்யும் கருமங்களின் சிறப்பு, மாணவர் — ஆசிரியர் ஒத்துழைப்பு, தலைமை தாங்கும் தன்மை, பாடசாலையைத் தனது இல்லமாகக் கருதி செயற்பட்டமை ஆகிய அனைத்துமே எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டிய அம்சங்களாகும்.

இன்னும் பல காலம் உடல், உள பலத்துடன வாழ்ந்து வழிகாட்டவும், சேவை செய்யவும் இறைவன் இப் பெரியாருக்குச் சகல வளங்களையும் வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

சு. கணபதிப்பிள்ளை
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்),
யாழ். வலயம் 2.



## திரு. சுப்பிரமணியம் செல்லத்துரை

[S. L. P. S. Grade 1]

பிறந்த திகதி 28-03-1938

### சேவை விவரம்

1961 மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.
1968 யா/ மாதகல் நுணசை வித்தியாலயம்.
1969 யா/ கீரிமலை நகுலேஸ்வர ம. வித்தியாலயம்.
1971 யா/ மகாஜனக்கல்லூரி.
1972 வ/ மாங்குளம் அ.த.க. வித்தியாலயம்.
1974 யா/ இளவாலை மெய்கண்டான் ம. வித்தியாலயம்.

## ஆசிரியத் தொழிலுக்கு மகிமை ஊட்டியவர்

''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொன்மொழிதரும் பாடமாகும். இதற்கு இயைய தாம் வாழ்ந்தும் மற்றவர்களை வாழ வழி காட்டியும் அரும்பணி ஆற்றிய ஒரு சில ஆசிரியர்களை நான் என்றும் வாழ்த்துவது உண்டு. இவர்களில் என்றும் என் மனதில் இடம்பெற்றிருப்பவர் அதிபர் சைவப்புலவர் திருவாளர் செல்லத்துரை அவர்கள்.

இப்பெரியாரின் கல்வி வாழ்விலும் கடமை வாழ்விலும், குடும்பவாழ்விலும் ஒரு நேரிய நெறியைக் காண முடிகின்றது. இதனுடைய பிரதிபலிப்பை இளவாலை மெய்கண்டான் வித்தியாலய வைர விழாவிலே நான் கண்டு பூரிப்படைந்தேன். எழுச்சிமிக்க பெருவிழாவாக அது நடைபெற்றது.

அதிபர் செல்லத்துரை அவர்கள் நல்லாசிரியராக, சிறந்த சொற்பொழிவாளராக, பாராட்டக் கூடிய கல்வித் தொண்டராக விளங்கி அதிபராம் நிலைக்கு உயர்ந்து அனைவரது பாராட்டையும் பெற்றவர். அன்று பாடசாலைக்கு மணிவிழா; இன்று அதிபருக்கு மணிவிழா.

எதுவித சலிப்பும் இன்றி ஆர்வலர்கள் பலரும் ஆசிரியர்கள் மாணவர்களும் ஒன்றுபட்டு விழா எடுத்து அதிபரைப் பாராட்டுகின்றார்கள். இவ்வைபவத்தில் அனைவரும் கலந்து இறும்பூது எய்துவோமாக.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## பல்திறமை மிக்க முகாமையாளர்

திரு. சு. செல்லத்துரை அவர்கள் எமது பாடசாலையில் 24 வருடம் அதிபராக இருந்து 37 வருடங்கள் கல்விச் சேவையாற்றி 60 ஆவது அகவையில் ஓய்வு பெறுகின்றார். நேர்மையான உள்ளம் படைத்தவர். கடமை உணர்வு நிறைந்தவர். கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கும தன்னை அர்ப்பணித்தவர். ஆசிரியர்கள் உளம் நோகாமல், எந்த விடயத்தையும் புதிய பாதையில் சிந்தித்துச் செயலாற்றியவர். அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆசிரிய [illegible]
[illegible]
முன்னாள் பாலர்பாடசாலை ஆசிரியை.
யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

## தனித்துவம் நிறைந்த அதிபர்

ஓய்வு பெறும் திரு. சு. செல்லத்துரை அதிபர் அவர்களைச் சிறிது காலமாக நன்கு அறிவேன். வலயம் 2 இல் உள்ள மூத்த ஒரு சில அதிபர்களில் இவரும் ஒருவர். அன்புக்குரியவர்; அன்பால், இனிய சொல்லால், ஆழ்ந்த புலமையால் சகலரையும் கவர்ந்தவர். தனது கல்லூரியினூடாகத் தனித்துவமான கல்விப் பாரம்பரியத்தை வளர்த்து வந்தவர். இடம்பெயர்வுகள், எத்தனையோ இடர்ப்பாடுகள் நிறைந்தவேளையிலும் தனது கலைக் கோயிலை அழியாது காத்து தனித்துவமாக வழிநடத்திச் சென்றவர்.

அவர் ஓய்வுபெறும் வேளையில் அவரது சேவையைப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வீ.இராசையா
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயம் 02.

## பல்துறைப் பண்பாட்டாளர்

தமிழ் பண்பாட்டு உடையில் தமிழையும் சமயத்தையும் ஒருங்கே ஆதரித்து வளர்த்துக் கொண்டு இருக்கும் சீரிய தமிழ்ப் பண்பாட்டாளன்.

அதிபர் சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் செயற்கரிய செயல்கள் செய்து ஓய்வுபெறுவதையிட்டுக் கல்விச் சமூகம் இவரது நற்பணிகளைப் போற்றி வாழ்த்துகிறது. நல்லாசிகள் பலமனமாரக் கூறி வாழ்த்துகின்றேன்.

ஆ. கமலநாதன்
கோட்டக்கல்வி அதிகாரி, தெல்லிப்பழை.

## சொல்லியவாறு செய்பவர்

அதிபர், சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் எவருடனும் எந்த விடயத்தையும் மிக நேர்மையாக விவாதிக்கும் திறனும், தான் சொல்லியவாறு செயற்படுததும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்.

அவரின் பணி தொடர்ந்தும் பாடசாலை நிர்வாகிகளுக்கும், மாணவ சமுதாயத்திற்கும்கிடைக்க வேண்டும் என்று ஆசி கூறுவதோடு மேலும்பல சிறப்புகள் பெற்று வாழப் பாடசாறையில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானை வணங்கிவாழ்த்துகிறேன்.

அ. பேரம்பலம் (புதிய அதிபர்)
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.

## நினைவில் இருந்து நீங்காதவர்

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் மணிவிழாக்காணும் அதிபர் சைவப் புலவர் திரு சு. செல்லத்துரை அவர்கள் தமது அறுபதாவது அகவையில் அதிபர் பணியிலிருந்து இனிதே ஓய்வு பெறுகிறார் என்பதை நம்பவே முடியவில்லை. காரணம் அவரது புன்சிரிப்பு நிறைந்த முகமும், சுறுசுறுசுறுப்பாககருமங்களை ஆற்றும் செயற்றிறனும் கொண்ட தோற்றம் ஆகும்.

தனது சேவைக் காலத்தில் ஆசிரியர், அதிபர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். அந்த வகையில் இப்பாடசாலைக்கு அதிபராக வந்தகாலந் தொடக்கம் இன்று வரை பாடசாலை வரலாற்றின் வசந்த காலமாகத் திகழ்ந்தது.

பழையமாணவர்கள்

## பல்துறை விற்பனர்

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் திருமிகு. சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்களின் அரிய பெரிய சேவை எவராலும் போற்றப்படுகிறது.

சிறந்த சமய, இலக்கியப் பேச்சாளர், எழுத்தாளர், நாடகப் படைப்பாளரான இவர் தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின்மூலகர்த்தாக்களில்முக்கியமானவர்

சி. சிவமகாராசா, தலைவர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.

## ஏழை பங்காளர்

எமது ஊரின் கண்ணே விளங்கும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபராக இருந்து அளப்பரிய சேவைகள் நல்கிய எம் அதிபர் ஓய்வு பெறுவதையிட்டு மன மகிழ்வு அடைகின்றோம். அதே வேளை ஏழைகளின் தந்தையாக இருந்து அவர்களின் துயர்துடைத்து அவர்களையும் ''வாழக்கல்'' என்று உற்சாகமூட்டிய அதிபரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

பொ. இராசேந்திரம்
(கிராம சேவையாளர்)
இளவாலை வடக்கு (J/222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தில் போராடுபவர்கள் கிராமப்புற இளைஞர்களே!

## அனுருத்த கூறுகிறார்

வடக்குக் கிழக்கில் இடம் பெற்றுவரும் போரில் படைகளுடன் இணைந்து போராடுவது மருதானையை அல்லது பொறளையை அல்லது கறுவாக்கட்டைச் சேர்ந்த இளைஞர்கள் அல்லர்; கிராமப் புற இளைஞர்களே போராடுகிறார்கள்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கட்சி விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய பிரதேசங்களில் சுமார் 70 சதவீதமான பிரதேசத்தை தற்போதைய அரசு மீட்டெடுத்துள்ளது. விடுதலைப் புலிகள் வசமுள்ள எஞ்சியுள்ள பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ—10)

# மருதடிவிநாயகர் ஆலயம்; ஞாயிறன்று கொடியேற்றம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 27

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10-30 மணிக்கு துவாஜாரோகணத்துடன் (கொடியேற்றம்) ஆரம்பமாகும்.

ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், 13ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மெமோறியல்ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் போக்குவரத்து மற்றும் ஏனைய தேவைகளுக்காகச் சேவையாற்ற உள்ளனர்.

சென்ற வருடத்தை விட இவ்வருடம் கூடுதலான அடியார்கள் விழாவுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-152)


**MEMORICH**

( BRAIN TONIC )

A MEMORY BOOSTER&HEALTH PROMOTER

மெமோரிச் ஓர் ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட மன, உடல் வளர்ச்சிக்கான மூளையின் செயற்பாட்டை விருத்தி செய்து தூண்டக் கூடிய அற்புதமான, இனிப்பான, சுவையான பானமாகும்.

★ மூளைச்சோர்வு ★ மனச்சோர்வு
★ ஞாபகசக்திக் குறைவு ★ நரம்புத் தளர்ச்சி
★ பலஹீனமனநிலை ★ பதற்றம்

போன்ற நிலைகளிலும், பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும், நாட்பட்ட நோயாளர்களுக்கும் கும் புத்துணர்வையூட்டவல்லது.

இது ஓர் இந்தியத் தயாரிப்பாகும்.

விலை ரூபா 250

**மங்களபதி வைத்தியசாலை**

41/5, அரச வீதி,

( பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் வீதி)

நல்லூர், யாழ்ப்பாணம்.

[ 54810 ]


## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 17 — 01 — 1942

உதிர்வு: 07 — 04 — 1997

அமரர்

**சதாசிவம்பிள்ளை குணராஜசிங்கம்**

(முன்னாள் வெல்டர் K. C.W)

திதி: 27 — 03 — 1998

ஆதரிக்க ஆயிரம் உறவுகள் உண்டு
அரவணைக்க அன்பான உள்ளங்களுண்டு — ஆனாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
ஓராண்டு காலம் ஆறாக ஓடிவிட்டதே!
ஓராண்டு காலமென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
எமது விழிகளில் கசிந்த ஈரம் இன்னும் காயவில்லையே!
உடலம் பிரிந்தாலும் எம் நினைவலைகள் ஊடாக
உங்களைத் தேடிக் கொண்டுதானிருக்கிறோம்!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:


அன்பு மனைவி,
பிள்ளைகள், உறவினர்.

முகவரி:
கோட்றோட், மல்லாகம்.

# பற்றிக்ஸ்- யாழ்ப்பாணக் கல்லூரி
# ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 10 ஆவது வருடாந்த — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்— ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் நாளை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.



சென் பற்றிக்ஸ் அணியினர்

### பற்றிக்ஸ் அணி

சென். பற்றிக்ஸ் அணிக்கு எஸ். சஞ்சீவன் தலைமை வகிக்கின்றார். ஜே. பி. றொஸ்ட்டன் உபதலைவர். ஏனைய வீரர்கள் விவரம் வருமாறு:- எஸ். ருத்திரசேகரம், எ. ஜஸட் அஞ்சலோ, ஜே. ஸி. பானுஜெயன், ஜி. ஆர். தேவராஜன், பி. தர்ஷன், என். ஜே. இமயகாந்தன், ரி. சாம்ஸன், ஜி. அருள்ராஜ், பி. பார்த்திபன், இ. நிமலராஜ், ரி. ஜெயராகவன், எம். திவாகரன், ரி. ஜெயமுகுந்தன், ரி. ஜே. அன்ரோனியஸ்.


பயிற்றுநரும் பொறுப்பாசிரியரும்— பி. ஜெயகுமார்.

### யாழ்ப்பாணக் கல்லூரி அணி

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு வி. கிருபாகரன் தலைமை வகிக்கின்றார். ஆர். குகன் உதவித் தலைவர். ஏனைய வீரர்கள் வருமாறு:- ரி. ஹரிநியூட்டன், ஆர். ரிசேஷ், எஸ். செந்தூரன், எஸ். சதீஸ், எம். பிரணவரூபன், வி. வின்சென்ட் ஜெயகுமார், ஜி. லக்ஷ்மன், எஸ். செந்தூரன், எம். வசந்தகுமார், பி. நரேன், ஏ. கிருபாகரன், கே. சதீஸ், எஸ். பார்த்திபன், எஸ். நிதிதரூபன்.

பயிற்றுநர் சிவேந்திரன்.

மேற்படி இரு அணிகளுக்கும் இடையில் கடந்த வாரம இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 'பொன் அணிகள் போர்'— இரண்டு நாள், இன்னிங்ஸ் முறையிலான— கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.



யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்

(உ)

# மடுத்தேவாலயத்துக்கு யாத்திரிகர்கள் குழு!

மன்னார், மார்ச் 27

மன்னார் மடு தேவாலய வழிபாடுகளில் கலந்துகொள்வதற்காக 125 பேர் சிலாபத்தில் இருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி அங்கு செல்லவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அனுமதி பெற்று அங்கு செல்லும் இவர்கள் மறுநாள் அங்கிருந்து திரும்புவர்.

மடு தேவாலயத்துக்கு தென்பகுதியில் இருந்து வழிபாட்டுக்கு பக்தர்கள் செல்ல அனுமதி வழங்கியுள்ள விடுதலைப் புலிகள் சில கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர்.

யாத்திரிகர்களுடன் பத்திரிகையாளர்கள், முன்னாள் படையினர் வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# கால்நடை வளர்ப்போருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் 96 ஆம் ஆண்டுக்கு முன் அங்கத்துவம் பெற்ற சகலரும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் சங்கச்செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-8)

# வி. கழகங்களின் விவரம் பதிவு

வலி. வடக்கு மார்ச் 27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை பதிவு செய்யப்படாத விளையாட்டுக்கழகங்கள் உடன் பிரதேச செயலர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக்கழகங்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள் அடுத்த வாரம் ஆரம்பமாக இருப்பதை முன்னிட்டே விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

('ஐ–86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### இலகு திருமண சேவை

வயது 32 Bank, வயது 31 Accoutant, வயது 32 கனடா பிரஜை, வயது 24 Engineer U. K பிரஜை, வயது 39 U. K பிரஜை, வயது 32 கனடா பிரஜை மாப்பிள்ளைகள் உண்டு. தேர்வுக்கு நாடுங்கள்: ஞாயிறு காலையில் ''துரை விமலா''958/8, கே. கே. எஸ் வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி.

(54328)

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் புதிய பிரிவு சனி, ஞாயிறு (28/03/98) அன்று ஆரம்பம். தொடர்பு: R மருதலிங்கம், 116, பலாலி வீதி (கராச் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(54330)

### விற்பனைக்கு

மாணவர்கள் கூட்டாகச் சேர்ந்து படிப்பதற்கு உகந்த பெரிய மேசையுடன் கதிரைகளும், தனிப்பட்ட படிக்கும் மேசையும் மீற் சேல் (F) கண்ணாடி அலுமாரி, காரியாலய மேசை, சோக்கேஸ், Chest of Drawers, கிடாரம், சில்வர்ப் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 28, யாழ். றோட், பெருமாள்கோயிலடி, யாழ்ப்பாணம்.

[54313]

லிஸ்ரர் எஞ்சின் 16 HP, 40 HP கிறசர் 16X!0 பக்ஸ்ரர் இங்கிலாந்து விற்பனைக்கு உண்டு. அத்தோடு 10X6 சீன கிறசர்ஜோ தேவை. தகுந்த விலைதரப்படும். தொடர்பு: இல. 312, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

[54319]

வீடடுத் தளபாடங்கள், ரியுட்டரி கொட்டகை, வீட்டுப் பாவனைப் பொருள்கள், தையல் மெஷின் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. அம்பிகையாகன் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(54334)

### தவறிவிட்டன

கந்தசாமி சிறீஸ்காந்தரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன பலாலி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். யாழ்ப்பாணம் அண்ணா கோப்பி கடைக்கு முன்பாக உள்ள முட்டைக்கடையில் சேர்க்கவும்.

[54317]

மயில்வாகனம் ராஜேந்திரன் ஆகிய எனது தேசிய (720393115V) அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், இராணுவ பாஸ் ஆகியன நாவலர் வீதிக்கும், பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீஸ்ரார்சலூன், கச்சேரியடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

[54321]

### வீடு வாடகைக்கு

திருக்குடும்ப ஆங்கில கன்னியர் மடத்திற்கு முன்னால் அமைந்திருக்கும் இல. 187, வேம்படி வீதியில் மாலை (3.30- 5.30) மணிக்கிடையில் தொடர்பு கொள்ளலாம்.

[54311]

### திருத்த வேண்டுமா?

ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B.Sc. Ceylon, Dip. In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம்.

[சி/3069]

---

தாவடி – அருள்மிகு

## ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய
## வருடாந்த மகோற்சவம்

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நிகழும் ஈசுர வருடம் பங்குனி மாதம் 15ஆம் திகதி (29-3--1998) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகுதானிய வருடப் பிறப்பன்று தேர் உற்சவமும், அடுத்த தினம் தீர்த்த உற்சவமும் இடம் பெற்று மகோற்சவம் நிறைவு பெறவுள்ளது.

**கொடியேற்றம் 29 – 03 – 1998**
ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி

**தேர்த்திருவிழா 14 – 04 – 1998**
(புதுவருடப் பிறப்பு)
காலை 7-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை

**தீர்த்தோற்சவம் 15 – 04 – 1998**
காலை 9-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை

விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

— ஆலய பரிபாலன சபை

(54260)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**இ. பாலசுப்பிரமணியம்**

(ஆசிரியர், யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை)

உதயம்: **18 - 07 - 1948**    மறைவு: **07 - 04 - 1997**

திதி; **27 - 03 - 1998**

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், நல்ல ஒரு குடும்பத்தலைவனாக வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் இனிய நினைவுகள் எங்களை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்:

பாசமிகு மனைவி விக்னேஸ்வரி,
பிள்ளைகள்: கஜானன், ரேகா, ரேணுகா.

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(50005)

---

## இதோ யாழ். நகரில்!

தொலைத் தொடர்பு வசதிகளுக்கு

நவீனசந்தை மேல்மாடியில் உள்ள லிங்கம் சில்க் ஹவுஸ் அருகில் உள்ள ஸ்தாபனத்தில் உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**லிங்கம் சில்க் ஹவுஸ்** [அருகில்]
நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(54312)

---

## மணிவிழாவும்
## சேவைநலன் பாராட்டுதலும்

★  ★

**கந்தசாமி கோபாலகிருஸ்ணன்**

பிறந்த திகதி 22 - 02 - 1938

ஆரம்பக் கல்வி — யா/விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி
சென்னைப் பல்கலைக்கழகம் — கலைப்பட்டம் B.A 1964 – அரசியல், பர்மிங்காம் சர்வகலாசாலை இங்கிலாந்து தத்துவமானிப் பட்டம் - B. Phil (E d) 1981
யாழ். பல்கலைக்கழகம் முதுகலைமானி கல்வி M A [Ed.] – 1986

### சேவை

1956 – 59 மூன்று ஆண்டுகள் ஆங்கில உதவியாசிரியர்– புசல்லாவ 32 ஆண்டு. யா/கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலனற்றோர் பாடசாலை – உதவி ஆசிரியர், துணை அதிபர், பதில் அதிபர், பாடசாலைப் பிரதம விடுதி மேற்பார்வையாளர், சாரணியப் பொறுப்பாளர், விளையாட்டுத்துறைச் செயலர், பழைய மாணவர் சங்கக் காப்பாளர்/ஆலோசகர் ஆசிரிய சங்கத் தலைவர்.

### பொதுப்பணி

கைதடிப் பிரஜைகள் குழுத் தலைவர், பொது நூல் நிலைய அபிவிருத்திச்சபைத் தலைவர்

### அபிவிருத்திப்பணி

ஆங்கிலக்கல்வி வளர்ச்சி - முறைசாராக்கல்வி அறவழிப்போராட்டக்குழு — முன்னாள் தலைவர், செயலாளர், தற்போதைய கல்வி ஆலோசகர், இயக்குநர், பாலர் கல்வி அபிவிருத்தி.

கிளிநொச்சிமாவட்ட சாரண ஆணையாளர் 15 வருடத்துக்குமேல் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் காப்பாளர் ஊனமுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத் துணைத்தலைவர்.

32 வருடங்கள் பிறப்பிடத்தை விட்டு கைதடியில் குடிஅமர்ந்து அக்காலத்தில் நவீல்ட்டில் ஊனமுற்றவர்கள் வாழ்க்கை சிறப்புற உழைத்ததோடு கைதடி வாழ் மக்களுடன் இரண்டறக் கலந்து தன்னலமற்ற சேவைகள் செய்தவர். அத்தோடு ஆங்கிலக் கல்வியை சிறப்புடன் கற்பித்து கல்விச் சேவையை வழங்கி எங்கள் மண்ணுக்கு தொண்டாற்றும் திரு. க. கோபாலகிருஸ்ணன் அவர்கள் நோய்நொடியின்றி பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

முறைசாராக் கல்விப் பிரிவு (ஆங்கிலம்)
மாணவர்கள்
யா | கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்.

(54315)

---

## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

சகல வசதிகளுடனும் தங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஏ. கே. பி. லொட்ஜ் (சுலைமான் ஆஸ்பத்திரிக்கு முன்பாக)

என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T. P. NO:- 075330356
075330354

**A. K. B. LODGE** 9, GRANDPASS ROAD, COLOMBO – 14

(54223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தட்டிச்சொல்லுங்கள்

இனப் பிரச்சினைக்கும் இப்போது தீர்வு வராது; அதே போன்று இடம் பெயர்தல், அகதி முகாம் வாழ்வு ஆகிய இரண்டுக்கும் முடிவு வராது என்றாகிவிட்டது.

போர் நடைபெறும் பகுதிகளில் வாழும் மக்களின் — அடிக்கடி இடம்பெயரும் மக்களின் — கஷ்டங்கள் ஒருபுறம். அரசாங்கத்தின் — படைகளின் — கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அகதி முகாம்களில் தங்கியிருப் போரின் நிலை இன்னொரு ரகம்.

தமிழர் சம்பந்தப்பட்ட ஏனைய விவகாரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றனவோ, அதேபாணியில் அகதி முகாம்களை அதிகாரிகள் நினைத்து நினைத்தாற் போல இடம் மாற்றுகிறார்கள்.

மக்களுக்கு அதனால் ஏற்படும் சிரமங்களைப் பொருட்படுத்துவதில்லை. நாளும் பொழுதும் பாதுகாப்புக் குறித்தே சிந்தனையும் செயற்பாடுமாக உள்ளது.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களில் மிகப் பெரும்பாலானோர் அவரவர் விரும்பிய, அவர்களுக்கு வசதி எனப்பட்ட இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படாதவர்களே. அவ்வாறு அனுமதி வழங்கப்படாமையும் பாதுகாப்புக்காரணம் கருதியதே!

வவுனியா மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இயங்கும் அகதி முகாமை மாற்ற முடிவு செய்யப்பட்டதும் பாதுகாப்புக் கருதியே! பாதுகாப்புப் படையினரின் வசதி கருதியே.

விரும்பிய இடம் சென்று தங்கும் சுதந்திரமும் இல்லை; தங்கும் முகாமும் நிரந்தரமில்லை; அதுவும் இடம்பெயரும் அவலம். இவ்வாறு இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் அவலப்படுகின்றார்கள்; அவதிப்படுகிறார்கள் தமிழ் மக்கள்.

அவர்களைப்பற்றி, அவர்களின் அலங்கோல வாழ்க்கை குறித்து, அக்கறைப்படுவோர் யார்? ஆடியில் ஒரு முறை அமாவாசையில் ஒரு முறை என்று அவர்களின் கஷ்ட நிலை மீது வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

அவ்வேளைகளிலும் அது அரசின் கண்ணிற்குத் தெரிவதில்லை படுவதில்லை. பிரச்சினைகளுக்குப் பரிகாரம் எதுவுமின்றியே நாள்கள் நகர்கின்றன. அகதிகளின் – இடம் பெயர்ந்தவர்களின் கஷ்டங்களும், அவர்கள் எதிர் நோக்கும் தொல்லைகளும் அதிகரிக்கின்றனவே அன்றிக் குறைவதாக இல்லை.

வவுனியா வேப்பங்குளம் அகதி முகாமில் தங்கியுள்ளோருக்குத் தரமற்ற உணவு வழங்கப்பட்டமை இதற்கு ஓர் உதாரணம்.

கஷ்டமுறுவோரை மேலும் துன்பமுறச் செய்வதில் படை, சிவில் தரப்பு அதிகாரிகள் ஏட்டிக்குப் போட்டியாகநடந்து கொள்கிறார்களா? துரதிர்ஷ்டவசமாகத் தாங்கள் அகதிகளின் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டால், எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்தால் இத்தகைய முறைப்பாடுகள் வருமா? அரசே, அதிகாரிகளே! மனித நேயத்தைச் சற்றுத்திறந்து விடுங்கள்! உங்கள் இதயத்திடம் தட்டிச் சொல்லுங்கள்!

# பொன்னம்பலத்திலும் வெள்ளியம்பலத்திலும்

# திருவடி மாறி நடனமிடும் சிவக் கோலங்கள்

தில்லை என்று சிறப்பித்துப் பேசப்படும் சிதம்பரத்திலே ஐந்து மன்றுகள் (சபைகள்) உள்ளன. இந்த மன்றுகளின் கூரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலோகத்தினால் வேயப்பட்டவை. இவைகளில் பொன் ஓடுகளால் வேயப்பட்ட 'கனகசபை'யும் ஒன்று. இது 'பொன் அம்பலம்' என்றும் புகழப்படுகிறது. ஒன்பது தங்கக் கலசங்களைத் தாங்கி நிகரில்லாத பொலிவுடன் விளங்கும் இதன் கூரையைப் பராந்தகன் என்னும் சோழமன்னன் சமைத்தான். இதனால் பொன் 'வேய்ந்த சோழன்' என்ற காரணப் பெயரையும் அவன் பெற்றான்.

கனகசபையிலே சிவமும் சக்தியும் இணைந்து இயற்றும் தாண்டவம் ஆன்மாக்களுக்கு, தனு, கரண, புவன, போகம் என்பனவற்றை அருளுகிறது. [தனு: உடம்பு; கரணம்: இந்திரியம் முதலாய புறக்கருவிகளும், மனம் முதலாய உட்கருவிகளும்; புவனம்: வசிக்கும் உலகம்; போகம்: அனுபவிக்கப்படும் பொருள்கள்] முடிவில் முத்தியின்பத்தையும் வழங்குகிறது.

இடையறாது ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தம், இறைவன் இயற்றும் பஞ்ச கிருத்தியங்களைச் சுட்டி நிற்கின்றது. நடராஜ மூர்த்தியின் வலது திருக்கரத்தில் விளங்கும் உடுக்கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும். இடது கரத்திலே ஒளி விடும் அக்கினி அழித்தலையும், முயலகனை மிதித்து ஊன்றிய வலது திருவடி மறைத்தலையும், தூக்கிய இடது திருவடி அனுக்கிரகத்தையும் (அருளலையும்)

## ஞானக் கதிர்

குறிக்கின்றன.

நடன கரணங்கள் (நடன வேறுபாடுகள், எண்ணிக்கை) நூற்றெட்டு என்று பரதக் கலை நூல்கள் பேசுவதுடன் அவைகளை விவரிக்கின்றன. சில தாண்டவம் நூற்றுஎட்டு என்று சிவாகமங்கள் கூறுகின்றன. பரதக்கலை நடராஜப் பெருமானிடமிருந்து வழி வழியாகப் பூமிக்கு வந்தது.

தாண்டவ வடிவம் பாரத தேசம் முழுவதிலும் காணப்படுகிறது. ஆயினும் பக்தி சிரத்தையுடன் போற்றி வழிபடப்படுவது தமிழ் நாட்டில் தான். தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும் நடராஜ உருவம் வழிபாட்டுக்கு உள்ளதாயினும், சிதம்பரத்தில் உள்ள நடராஜ மூர்த்திக்குத் தனிச் சிறப்பும், விசேட பூசை விதி முறைகளும், உற்சவங்களும் உள்ளன.

சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களில் 'ஆகாயத்தலம்' ஆகவும், மூர்த்தித்தலங்களில் 'தரிசிக்க முத்தி தரும் தலம்' ஆகவும், விரட்புருடன் அமைப்புக் கொண்ட பூவுலகுக்கு 'இருதய ஸ்தானம்'' ஆகவும் விளங்குகிறது. நடராஜமூர்த்தியின் நடனத் தோற்றம் தூல பஞ்சாக்கரம் [நமசிவாய], சூக்கும பஞ்சாக்கரம் [சிவயநம] எனப்படும் இரண்டு ஐந்து எழுத்துக்களையும் சுட்டி நிற்கும் ஓர் உருவம் ஆகும். நடராஜப்பெருமான் இடது திருவடியைத் தூக்கி நடனமிடும் கோலத்தைப் பொன்னம்பலத்தில் காணலாம்.

### வெள்ளியம்பலம்

ராஜசேகர பாண்டியனின் அரசசபைக்குச் சோழநாட்டுப்புலவர்ஒருவர் சென்றார். அவர் கரிகாற் சோழனின் குணாதிசயங்களையும் வீரத்தையும் மெச்சிப் பேசி ''எங்கள் கரிகாற் பெருவளத்தான், ஆடல் நூல் அறிந்தவன். அவனுக்கு ஆடற்கலையும் வரும், தங்களுக்கு வராதே'' என்று கூறி சிலநாள் தங்கி விடைபெற்று ஏகினார்.

புலவரின் வார்த்தையால் வெட்கமும் துக்கமும் அடைந்த ராஜசேகர பாண்டியன், தானும் அக்கலையைப் பயிலத் தொடங்கினான். ஆடற்கலைப் பயிற்சி அவனுடைய உடலுக்கு மிகவும் அயர்வு தருவதை உணர்ந்து, நடராஜமூர்த்தி எப்பொழுதும் இடது திருவடியைத் தூக்கிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறாரே, அந்தோ! அது அவருக்கு எவ்வளவு அயர்ச்சியைத் தரும் எனக் கிலேசமடைந்தான்.

கூத்தப் பிரான் முன் சென்று வணங்கி ''பெருமானே தூக்கிய இடது திருவடியைத் தரையில் ஊன்றி நின்று, வலது திருவடியை அடுத்து வீசி ஆடி அருள வேண்டும். அடியேன் பொருட்டு கால் மாறி ஆட வேண்டும். இன்றேல் உமது முன்னிலையில் உயிரை விடுவேன்'' என்று உள்ளம் நெகிழ வேண்டி நின்றான். பாண்டியனின் வேண்டுதலுக்கு இரங்கிய நடராஜமூர்த்தி இடது திருவடியை ஊன்றி வலது திருவடியை வீசி ஆடினார்.

நடராஜமூர்த்தி வலது திருவடியைத் தூக்கி நர்த்தனம் புரியும் தோற்றத்தை மதுரையில் உள்ள வெள்ளியம் பலத்தில் மட்டுமே காணலாம். சோமசுந்தரப் பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று.

—மூளாய் அருணாசலம்

# பூனை, நாய் என்பனவற்றில் இருந்து

# புதுவித நோய் பரவும் ஆபத்து!

யாழ்ப்பாணம், மார்ச் 27

நீங்கள் பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளை மிகவும் பிரியமுடன் வளர்ப்பவரா?

உங்கள் செல்லப்பிராணியுடன் நெருங்கிப் பழகி அதனைப் பராமரிப்பவரா நீங்கள்?

அப்படியானால் உங்களுக்குப் புதிய ஆபத்துக் காத்திருக்கிறது.

நாய், பூனை என்பனவற்றின் மலம் மூலம் பரவும் ஒருவித சர்ம தொற்று நோயால் யாழ்ப்பாணத்தில் சிலர் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இதனையடுத்து இந்நோய் தொடர்பாக வைத்திய வட்டாரங்கள் பொதுமக்களை எச்சரித்துள்ளன.

நாய், பூனை வளர்ப்பவர்கள் அவற்றை அண்டிப் பழகுவது, அணைத்துக் கொள்வது, அவை புழங்கும் இடங்களில் புழங்குவது போன்ற விடயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என யாழ். போதனா வைத்திய சாலை சர்மரோக நிபுணர் டாக்டர் திருமதி குகதாஸன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாய், பூனைகளின் மலத்தில் இருக்கும் அன்சிலோஸ்ரொமிகனினம் (Anchylos tome Caninum), அன்சிலோஸ்ரொமிப்ரஸிலியென்ஸ் (Anchylostome Brazielienze) என்னும் புழுக்களினாலேயே இந்த சர்மநோய் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்புழுக்கள் மலத்துடன் வெளியே வந்து அவற்றின் மலவாசலில் ஒட்டிக்கொண்டிருக்கும். இவ்வேளைகளில அவற்றுடன் நெருங்கிப் பழகுவதாலும் அவற்றைத் தூக்கி அணைத்துக் கொள்வதாலும் அப்புழுக்கள் மனித உடலில் தொற்றிக்கொள்கின்றன.

மேலும் நாய், பூனை என்பன உடுப்புகளில் படுத்திருந்தபின் அவற்றை கவனயீனமாக சுத்தம் செய்யாமல் பாவிப்பதாலும் இப்புழுக்கள் உடலில் தொற்றிக்கொள்ள வாய்ப்பாகிறது.

இந்த வகைப்புழுவுக்கு மனிதனின் சருமத்தைத்துளைத்துச் செல்லும் வல்லமை இருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மனித சருமத்தில் இப் புழு துளைக்கும் போது சிறிய முள் ஒன்று குத்தியது போன்ற வலிப்புடனான, சிறிய அடையாளம் காணப்படும். துளைத்த புழு சருமத்தின் உட்பகுதியில் செல்லும் போது அதனைப் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் இந் நோய் பரவிவருவதாகவும், இதுவரை பத்துப் பேருக்கு மேல் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று இருப்பதாகவும் தெரிய வருகிறது. (ஐ–15)

# யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

## தையல் நாயகியாள் நாயகனே!

கண்ணின் மணியாக காண்போர் துதிபாட
கழலேந்தி நிதமாடி கலையார்வம் தருகின்ற
விண்மீதும் மண்மீதும் வீசுபுகழ் பரவிவர
வீதிகளில் தமிழ்மணக்கும் வண்ணைநகர்
உறைபவனே!
மண்மீது மாந்தரிவர் நாளெல்லாம் அல்லலுறல்
மறைந்தேதான் போயிடவே மனமிரங்கி வர(ம்)
வேண்டி.
வண்ணை நகரினிலே தையல் நாயகியாள்
வதனமதி ஒளிவீச வாழ்பவனே! அருள்வாயே!

சிவ. [illegible]

(இன்று வெள்ளிக்கிழமை — ஐந்தாம் திருவிழா)

# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக அ. பேரம்பலம் நாளை முதல் பதவியேற்க உள்ளார்.

இதுவரை அதிபராக இருந்த சைப்புலவர் சு. செல்லத்துரை இன்று ஓய்வு பெறுகின்றனர். (ஐ–9)

## நாளை

பங்குனி 14

சனிக்கிழமை

திதி: அமாவாசை

முற்பகல்: 9.23 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பிற்பகல்: 2.39 வரை.

சுபநேரம்: 3 14–4.44

ராகு காலம்: 9.14– 10.44

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நாம் கடவுளிடம் தான் இருக்கின்றோம். அதைத் தெரிந்து கொள்ளாதது தான் நமிடம் உள்ள குறை.

- தத்துவ தீபம்

# தவக்கால சிந்தனை

(31 ஆம் நாள்)

சமுதாயவாழ்வின் அடிப்படை நம்பிக்கையாகும். விமானம் ஓட்டுபவனை நம்பியே அதில் பயணம் செய்கிறோம். தாய் இடும் உணவை உண்ணுமுன், அவள் அதில் நஞ்சு கலந்திருப்பாளோ என்றுஐயுறுவதில்லை. நம்பிக்கைக் குரியவரின் கூற்றை ஏற்றுக் கொள்கிறோம். குறைவுள்ள மனிதர்களை நம்பி நம் உயிரையே அவர்களிடம் ஒப்படைக்கும் நம்மை இறைவனில் முழு நம்பிக்கை வைக்கஅழைக்கின்றார் எரேமியாஸ்.

மனிதனை மட்டும் நம்பி வாழ்பவன் சபிக்கப்பட்டவன். இவனது இதயம் இறைவனிடம் இல்லை. இவன் பாலை நிலத்துப் பூண்டுக்குச் சமம். அழியும் பொருளில் நம்பிக்கை வைப்பவர் அத்துடன் அழிந்தொழிவர் என்பது வேத வாக்கு. பொன்னில் முழு நம்பிக்கை வைப்பது கடவுளை மறப்பதற்குச் சமம் என்கிறார் யோபு (31 : 24).

இறைவனை நம்புகின்றவனே ஆசிபெற்றவன் என்று எரேமியாஸ் நம்பிக்கைச் சுடர்களை மனித மனங்களில் பரப்புகின்றார். இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ்பவன் நல்லவழியில் நடப்பவனாய், பிறர் நம்பத்தக்கவனாய் வாழ்ந்திடுவான்.

-அருட்திரு.
பி. யே. யோகா
(அ. ம. தி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபராகச் சேவையாற்றிய

### சு. பாலசுப்பிரமணியன் ஐயா

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ மீசாலை விக்கினேஸ்வரா ம. வி.

(54229)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் தலைவரும் பிரபல சமய சமூக சேவையாளருமான

### உயர்திரு. விசுவலிங்கம் செல்வரத்தினம்

ஐயா அவர்கள் தனது மக்கள் பணியை மேன் மேலும் சிறப்புற முன்னெடுக்கும் வகையில் அவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதை வாழ்த்தி வர வேற்பதில் நாமும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். அவர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அராலி மத்தி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்

(54337)

## MASTER SCALE SERVICE & ENGINEERING WORKS

200, HOSPITAL ROAD, JAFFNA.

### மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ் அன்ட் என்ஜினியரிங் வேக்ஸ்

200, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ சகலவித நிறுவை அளவை உபகரணங்களையும் சீர்செய்து ''சீல்'' வைத்து (98 ஆம் ஆண்டு முத்திரை பொறித்து) பெற்றுக் கொள்வதற்கு நாட வேண்டிய நிறுவனம்.

★ எம்மிடம் தரமான லீற்றர் அளவைகள் விற்பனைக்குண்டு.

★ கடந்த காலங்களில் எமது நிறுவனத்தில் தமது நிறுவை, அளவை உபகரணங்களைச் சீர்செய்து சீல் வைத்துப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அவர்களுக்குரிய காலத்தில், மீண்டும் சீர் செய்து சீல் வைத்துத் தரப்படும் என்பதற்கு உத்தரவாதமளிக்கின்றோம்.

★ மின் உபகரணங்கள்:

ELECTRIC PUMP, SINGLE PHASE MOTOR, 3 PHASE MOTOR ELECTRIC PANEL REPAIRING AND FITTING UNDERTAKEN, REWINDING ELECTRIC MOTORS & GENARATORS,

- முகாமையாளர்

[ 54336 ]

## பொன்விழா

வலி.வடக்கு மார்ச் 27

மானிப்பாய் கிழக்கு பாரதி சன சமூக நிலைய பொன் விழா நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை தலைவர் க. திருநாவுக்கரசு தலைமையில் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் கால்களை இழந்த பெண் ஒருவருக்கு அமரர் சிவா இராஜேந்திரன் நினைவாக முச்சக்கர வண்டி அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது. மற்றும் சில கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் என்பன வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ–86)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் ஆரம்பக் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் நடைபெற உள்ளது.

இக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன்கள் காட்சிக்கு வைக்கப்படும். பாடசாலை அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெற உள்ள இக் கண்காட்சியில் ஆரம்பக்கல்வி ஆலோசகர் இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ–9)

## செயலகத்தில் திருத்த வேலை

நவாலி, மார்ச் 27

யாழ். செயலகத்தில்நீண்ட காலமாகப் பழுதடைந்த நிலையிலிருந்த மோட்டார் வாகன நிறுவைப்பாலம் தற்போது திருத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை சேதமடைந்திருந்த செயலகத்தின் முகப்புப் பகுதியும் கட்டடத் திணைக்களத்தினால் திருத்தம் செய்யப்பட்டுவருகின்றது. (ஐ–100)

## மெய்வல்லுநர் போட்டி

திருநெல்வேலி, மார்ச் 27

வண்ணை.வடமேற்கு ஆறுகால்மடம் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் க. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வண். வடமேற்கு கிராம அலுவலர் இ.ஜேசுதாசன் கலந்து கொள்வார். (ஐ–135)

## யாழ் - வங்கியாளர் சங்கம்
## விசேட அறிவித்தல்

ஜூன் 1998 இல் நடைபெறவிருக்கும் வங்கியாளர் இடைநிலைப் பரீட்சைக்குரிய வகுப்புக்களை எமது சங்கம் தற்போது நடத்திக் கொண்டிருக்கின்றது. இனி இறுதி நிலைப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன. ஆகவே இறுதிப் பரீட்சைக்குத் தோன்றவிருக்கும் வங்கி ஊழியர்கள் மேற்படி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பினால் என்னென்ன பாடங்களில் வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புகிறார்களென்ற விவரங்களுடன் 5/4/98 -க்கு முன் யாழ். வங்கியாளர் சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
யாழ். வங்கியாளர் சங்கம்,
இலங்கைவங்கி மாவட்டக்காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

25. 03. 98 (54340)

தொழிற்பயிற்சி
கிராமிய கைத்தொழில் அமைச்சு

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை

### மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம்
### யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ள மாவட்ட தேர்ச்சித்திறன் அபிவிருத்தி நிலையத்தில் 1998 ஆம் ஆண்டுக்கான கீழ்க் காணும் பாடநெறிக்கு பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத்திகதி 25 – 04 – 1998. கல்வித்தகைமை எட்டாந்தரத்தில் சித்தி. வயதெல்லை 16 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள்.

| பாடநெறி | காலம் |
|---|---|
| 01. பொறித்தச்சு வேலை | 1 வருடம் |
| 02. பொது உலோக வேலை | 1 வருடம் |
| 03. கட்டட நிர்மாணம் குழாய் பொருத்துதல் | 1 வருடம் |
| 04. மின்கம்பி இணைத்தல் | 1 வருடம் |
| 05. பொது தையல் வேலை | 6 மாதம் |

### பயிற்சியின் பின்னுள்ள சலுகைகள்

01. பயிற்சி நெறியை திருப்திகரமாக முடித்த பின்பு சுயதொழில் முயற்சிக்கு வங்கிக்கடன் பெற முடியும்.
02. இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரி மூலம் வேலைவாய்ப்பு கோருவதற்கு வழிகாட்டல்.
03. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கும் வழி செய்து தரப்படும்.
04. தொழில் நுட்ப துறையில் மேற்கொண்டு கல்வி பெறுவதற்குச் சந்தர்ப்பம்.

தலைவர்.
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை.

குறிப்பு:- விண்ணப்பப்படிவம் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியைக் குறிப்பிடவும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பிக்கும் பாடநெறி:-
02. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:-
03. முதலெழுத்துக்களுடன் பெயர்:-
04. நிரந்தர விலாசம்:-
05. பால் (ஆண்/பெண்):-
06. பிறந்த திகதி:- 1998 – 01 – 01 அன்று வயது
    வருடம்:- மாதம்:- நாள்:-
07. பிறந்த இடம்:-
08. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
09. தகப்பன் அல்லது பாதுகாவலர் பெயரும் விலாசமும்:-
10. கல்வித்தராதரம்:-
11. விண்ணப்பிக்கும் பாடநெறி (தமது விருப்பப்படி)
    1)................. 2).................
12. பெயர், தபால் விலாசம்:-
    (ஆங்கிலத்தில் எழுதவும்)
13. விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலர் பிரிவு:-

மேற்குறிப்பிடப்பட்டவிவரங்கள்உண்மையானதும், சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது விவரங்கள் தவறானவையென நான் தெரிவு செய்யப்பட்ட பின்பு வெளிப்படுத்தப்பட்டால் எனது பயிலுநர் நிலை இரத்துச் செய்யப்படுமென்பதை நான் அறிவேன்.

திகதி:- விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பப் படிவங்களை அரசாங்க அதிபர், திட்டமிடல் செயலகம், கச்சேரி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சகல விண்ணப்பங்களும் பெறப்பட்டு உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/3210)

## சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான
## வருடாந்த மகோற்சவம் - 1998

மகோற்சவ குரு: சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதம குரு, சுன்னாகம்

பூசகர்கள்; திரு. சி. ஐ. கந்தசாமி திரு. பெ. வாமதேவன்

| | | | | |
|---|---|---|---|---|
| துவஜாரோகணம் | 31 - 03 - 98 | செவ்வாய் | காலை | 9-30 மணி |
| வசந்தோற்சவம் | 05 - 04 - 98 | ஞாயிறு | மாலை | 3-00 மணி |
| வேட்டைத் திருவிழா | 07 - 04 - 98 | செவ்வாய் | மாலை | 2-00 மணி |
| சப்பறத் திருவிழா | 08 - 04 - 98 | புதன் | மாலை | 4-30 மணி |
| இரதோற்சவம் | 09 - 04 - 98 | வியாழன் | காலை | 10-00 மணி |
| தீர்த்தோற்சவம் | 10 - 04 - 98 | வெள்ளி | காலை | 10-30 மணி |
| பொங்கல் | 12 - 04 - 98 | ஞாயிறு | காலை | 10-00 மணி |

ஐயன் அடியார்கள் மகோற்சவ காலத்தில் விரதமிருந்து எம்பெருமானை வழிபட்டு ஐயன் அருள் பெற்றுய்வார்களாக!

குறிப்பு: **29 – 03 – 98** ஞாயிறு காலை 10–00 மணிக்கு கடைகளுக்கான இடங்கள் ஒதுக்கப்படும்.

சீ. செ. நடராசா — செயலாளர்
ந. ஸ்ரீவரதலிங்கம் — தனாதிகாரி
சி. குமரவேல் — தலைவர்

ஐயனார் தேவஸ்தான நிர்வாகசபை
(54341)

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டிவாழ்த்துகிறோம்

யா / மானிப்பாய்

## சோதிவேம்படி வித்தியாசாலை

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை 1997

1. க. ஸ்ரீபவன் — 138
2. ச. ஜனகன் — 122
3. க. கார்த்திகா — 112
4. மு. சதீஸ்மேனன் — 100
5. அ. பிரியஹாசன் — 96
6. ஜெ. கொலின்ஸ்ரன் — 95

மேற்படி பரீட்சையில் தோற்றிய பதினேழு மாணவர்களில் ஆறு மாணவர்கள் சித்திபெற்றதுடன் செல்வன் க. ஸ்ரீபவன் சண்டிலிப்பாய் கோட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார் இப்பெறு பேறுகளைக் கூட்டிவைத்த மருதடி விநாயகப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து மேற்படி மாணவர்கள் யாவரையும் பாராட்டுகின்றோம். இவர்களை ஊக்குவித்துக் கற்பித்த அதிபரையும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(54351)



# ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

தூய பிரயோக கணிதம்

A/L 98

★ முனைவு ஆள்கூறுகள் Sat. 3-00 — 5-00 p.m.
★ நிகழ்தகவு Sun. 3-00 — 5-00 p.m.

A/L 99

★ ஆள்கூற்றுக் கேத்திரகணிதம் Tue. 5-00 — 6-00 p.m.
★ தொடர்பு இயக்கவியல் Thu. 3-00 — 4-00 P.m.

ஆரம்பம்:- 28 - 03 - 98 (Sat.)

Mr. A. RAVI

- நிர்வாகி

(54343)



யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

# அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி மன்றத்தின் சீட்டிழுப்பு 25 — 03 — 98 புதன்கிழமை நடத்தப்பட்டது. இந்தச் சீட்டிழுப்பில் கீழ்வரும் இலக்கங்கள் பரிசிற்கு உரியவையாக தெரிவு செய்யப்பட்டன.

★ முதலாம் பரிசு:- 10929
★ இரண்டாம் பரிசு:- 10932
★ மூன்றாம் பரிசு:- 10105

ஆறுதல் பரிசிற்குரிய இலக்கங்கள்

1) 01782 2) 07831 3) 07879 4) 13643 5) 12960
6) 15948 7) 00058 8) 01541 9) 05893 10) 05091

மேற்படி சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட இலக்கங்களை உடைய அதிர்ஷ்டசாலிகள் 16 — 04 — 98 வியாழக்கிழமைக்கு முன் வணிகத்துறையுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

● பரிசு வழங்கப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

வணிக மாணவர் மன்றம்,
கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

(54348)



# புலமைப் பரிசில் - 1998

20 ஆவது பயிற்சிப் பரீட்சை (யாழ். மாவட்டம்)
அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. செல்வி மகேந்திரம் சுகன்ஜா — 188 புள்ளி (யாழ். கொ. இந்து ஆரம்ப பாடசாலை)
2. செல்வன் திருநாவுக்கரசு பிரஷாந்த் — 187 புள்ளி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)
3. செல்வன் குலதாஸ் டில்ஷான் — 181 புள்ளி (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி)
4. செல்வன் காந்தரூபன் முகிலன் — 181 புள்ளி (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி)
5. செல்வி செல்வராசா அபிநயா — 181 புள்ளி (யாழ். கொ. இந்து ஆரம்ப பாடசாலை)

மேலதிகமாக பரிசு பெறும் சுட்டெண்:
255, 378, 483, 29, 49

அடுத்த பரீட்சை 29 — 03 — 1998

BOND யாழ்ப்பாணம்

(54345)


## குருபூசை

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கச்சியப்பர்குருபூசை தினவிழாஇன்று காலை 9 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் பிரதம விருந்தினராக கலாசாலை அதிபர் செ. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (ஐ-9)


புறநிலைப் படிப்புகள் அலகு,
தென்மராட்சி பிராந்திய அலுவலகம்,
சாவகச்சேரி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் சாவகச்சேரி பிராந்திய அலுவலகம் பின்வரும் தலைப்புகளில் அடிப்படைக் கற்கைநெறிகளை நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறும். இக்கற்கை நெறிகளைப் பயில ஆர்வம் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள புறநிலைப் படிப்புகள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள்.

அடிப்படைக் கற்கை நெறிகள் பின்வருமாறு:-

1. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication)
2. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
3. பெண்களும் அபிவிருத்தியும்
4. கிராம அபிவிருத்தி
5. சர்வதேச விவகாரம்
6. சூழல் முகாமைத்துவம்

மேலும் வேறு கற்கை நெறிகளைக் கற்பதற்குப் போதியளவு எண்ணிக்கையினர் கோரிக்கை விடுக்குமிடத்தும் அவற்றைக் கற்பிப்பதற்குப் புலமை சான்றோர் கிடைக்குமிடத்தும் அவற்றைக் கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே மேற்குறிப்பிடப்படாத வேறு கற்க விரும்பும் கற்கை நெறிகள் பற்றிய விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய அலுவலகம் அறிய விரும்புகின்றது. தயவுசெய்து எழுத்து மூலம் அறியத்தரவும்.

புலமை சான்றோர்

மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக் கழகத்திற்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் தகைமையை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலமைந்த சுய விவரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

— பதிவாளர்
யாழ். பல்கலைக் கழகம்.
26-03-98

(சி/3215)


# தென்மராட்சியில் கசிப்பு வேட்டை!

தென்மராட்சி, மார்ச் 27

தென்மராட்சிப் பிரதேச மதுவரி நிலைய உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனைகளால் இப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை ஓரளவுக்கு கட்டிப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி செய்யப்படும் கைதடி, நாவற்குழி, தச்சன்தோப்பு, மட்டுவில், கல்வயல், மீசாலை, கெருடாவில் ஆகிய பகுதிகளில் அண்மையில் நடத்தப்பட்ட திடீர் வேட்டைகளில் பெருமளவு கசிப்பு உற்பத்தி உபகரணங்களும், தயாரித்து பரல்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கசிப்பும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் கசிப்பு விற்பனை செய்யப்படும் சாவகச்சேரி, தனங்கிளப்பு, மட்டுவில், மீசாலை, கொடிகாமம், மிருசுவில், சங்கத்தானை, கைதடி போன்ற இடங்களில் நடத்தப்பட்ட திடீர்ச் சோதனைகளின் போது பெருமளவு கசிப்பும் கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பு விற்பனை செய்தவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அனுமதிப் பத்திரம் பெற்ற இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் சாராயம், கள் ஆகியவை விற்பனை செய்த பலர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாவும், அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்த இருவருக்கு தலா 500 ரூபாவும், அனுமதியின்றி கள் விற்பனை செய்த ஒருவருக்கு 350 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

(ஐ-117)

# பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ சீனி

யாழ்ப்பாணம், மார்ச் 27

ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ சீனி வழங்கப்படவிருக்கிறது.

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ள சீனியை ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு யாழ். மாவட்ட நுகர்வு, விவசாய கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனைச் சந்தித்து கோரிக்கைவிடுத்தார்.

இதையடுத்தே சகல கிளைகள் மூலமும் சீனியை வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

விநியோகத்துக்கான சீனியைப் பெற்று 30 ரூபாய்ப்படி விற்பனை செய்யுமாறு சகல ப. நோ. கூ. சங்கங்களையும் திட்டப்பணிப்பாளர் சி.மகாலிங்கம் கேட்டுள்ளார்.

(இ-3-17)

## சமய நிகழ்வுகளில்

வடமராட்சி, மார்ச் 27

வல்வெட்டித்துறை சிவன் கோயில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-173)

★ ★ ★

நாயன்மார்க்கட்டு அரசகேசரிப்பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மகா யாக கும்பாபிஷேகமும் மறுநாள் மாலையில் திருவூஞ்சலும் இடம்பெறும். (இ-103)

★ ★ ★

மீசாலை மேற்கு இலந்தைத்திடல் கங்காணியார் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோயில் இலட்சார்ச்சனை விழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இலட்சார்ச்சனை விழா இன்று வெள்ளி ஸ்கந்தஹோமம் அபிசேகத்துடன் நிறைவு பெறும். (இ-31)

# கலாபூஷண விருது

யாழ்ப்பாணம், மார்ச் 27

கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் வழங்கப்படும் கலாபூஷண விருது இம்முறையும் வழங்கப்பட உள்ளது. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, தம்புரா, கஞ்சிரா, தவில், நாதஸ்வரம், பரதநாட்டியம், நாட்டுக்கூத்து, வில்லிசை, கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, சிற்பம், ஓவியம், அருங்கலைகள் ஆகியவற்றில் தேர்ச்சிபெற்று நீண்ட காலம் சேவை புரிந்தவர்களுக்கே இந்த விருது வழங்கப்பட உள்ளது.

மேற்படி கலைகளில் தேர்ச்சி பெற்றோர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் ச. பேரானந்தன் கேட்டுள்ளார்.

(இ-8-9)


# நினைவுப் பெயர்சூட்டல் வைபவம்

மறைந்த பேராசிரியர் சி. மகேஸ்வரன் அவர்களின் ஞாபகார்த்தமாக இரசாயனவியற்றுறை மண்டபத்திற்கு "மகேஸ்வரன் மண்டபம்" எனப் பெயர் சூட்டப்படவுள்ளது.

இடம்: இரசாயனவியற்றுறை மண்டபம்.

காலம்: 28-03-98 சனிக்கிழமை காலை 9 மணி

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள அனைத்து விஞ்ஞானபீட மாணவர்களையும் காலை 8. 45 மணிக்கு இரசாயனவியற்றுறை மண்டபத்தில் கூடுமாறு வேண்டுகின்றோம்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/3211)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பெண்களுக்கான ஏழுவகைப் போட்டி (Heptathlon), ஆண்களுக்கான பத்து வகைப் போட்டி (Decathlon) மற்றும் அஞ்சலோட்ட நிகழ்வுகள் ஆகியவை நாளை காலை 8.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

ஏழுவகைப் போட்டி, பத்து வகைப் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றவிருக்கும் தனி மெய்வல்லுநர்கள் நாளை காலை 8.30 மணிக்கும் அஞ்சலோட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் பாடசாலை, கழக அணிகள் காலை 9.00 மணிக்கும் மைதானத்துக்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

ஏழுவகை, பத்து வகைப் போட்டிகள் நடைபெறும் ஒழுங்குகள் வருமாறு:-

ஏழுவகைப் போட்டி

★ சனியன்று:- 100 மீற்றர் தடை தாண்டல், உயரம்பாய்தல், குண்டெறிதல், 200 மீற்றர்.

★ ஞாயிறன்று:- நீளம் பாய்தல், ஈட்டி எறிதல், 800 மீற்றர்.

பத்து வகைப்போட்டி

★ சனியன்று:- 100 மீற்றர், நீளம் பாய்தல், குண்டெறிதல், உயரம் பாய்தல், 400 மீற்றர்.

★ ஞாயிறன்று:- 110 மீற்றர் தடைதாண்டல், தட்டெறிதல், தடியூன்றிப் பாய்தால், ஈட்டி ஏறிதல், 1500 மீற்றர்.

அஞ்சலோட்டம்

ஆண்கள் பிரிவுக்கு 4X100 மீற்றர், 4X400 மீற்றர் மற்றும் கலப்பு அஞ்சல் ஓட்டங்களும் —

பெண்கள் பிரிவுக்கு 4X100 மீற்றர் கலப்பு அஞ்சல் ஓட்டங்களும் நடைபெறுகின்றன.

முதலாவதுஅஞ்சல்நிகழ்ச்சி நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறும். ஏனைய அஞ்சல் நிகழ்ச்சிகள் நடைபெறும் நேர அட்டவணை நாளை காலை மைதானத்தில் வழங்கப்படும் என்றும்—

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இன்று மாலைக்கு முன்னதாகயாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. சண். தயாளனிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும்—

யாழ். மாவட்ட அமைச்சூர் மெய்வன்மைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

★ ★ ★

மதிவதனன் வெற்றிக் கேடயத்துக்காக யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிமைதானத்தில் ஆரம்பமாகும். இன்றைய ஆட்டங்களில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் அணியும், சென்றலைட்ஸ் புளூஸ் அணியை எதிர்த்து கொக்குவில்மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் மோதும்.

(உ)

## வீரமணி ஐயருக்கு பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயருக்கு கௌரவ பாராட்டுப் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் நல்லை ஆதினக் கலாமண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தாதேசிக பரமாச்சார்ய சுவாமிகள், பிரம்மஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள், பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், ஆயர் அதிவண, கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் அருளுரை நிகழ்த்துவார்கள்.

பிரார்த்தனை உரையை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியும் பாராட்டு உரையை மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

விழாநாயகரின் சமஸ்கிருத புலமை பற்றி பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணனும், கோயிலாக்கங்கள் பற்றி செல்வி புஷ்பா செல்வநாயகமும், நாட்டிய நாடகம் பற்றி கலாநிதி சபா. ஜெயராஜாவும், இலக்கியத்துறை பற்றி கலாநிதி, க. குணராஜாவும் கர்நாடக இசைபற்றி நயினை நா.வி. மு. நவரத்தினமும், கவிதா நயம் பற்றி கவிஞர் சோ. பத்மநாதனும் பக்திரசம் பற்றி ஆறு. திருமுருகனும் சிறப்புரையாற்றுவார்கள்.

நயப்புரையை எழுத்தாளர்கள் செல்லப்பா நடராசாவும், ஆ. மகாலிங்கமும் வழங்குவார்கள்.

இவ்விழாவில் கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெறவுள்ளன.

(இ-9)

COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

விவரங்களுக்கு:

Director-

IIS, 68, Clock Tower Road, Jaffna.

IIS, Navalar Madam, Karaveddy.

(C/3179)

## தேசிய அ. அட்டை தாமதத்தை நீக்குமாறு எம். பி. கோரிக்கை

குடா நாட்டில் இருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து பல காலமாக காத்திருந்தவர்களுக்கு உடன் அடையாள அட்டை கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

அடையாள அட்டைகள் இல்லாத காரணத்தால் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளின் போது பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதையடுத்து ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

மற்றுமொரு தொகுதி விரைவில் அங்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

## மைலதன்னை படுகொலை வழக்கு ஓகஸ்ட் 24 இல் விசாரணைக்கு வரும்

கொழும்பு, மார்ச் 27

கிழக்கு மாகாணத்திலுள்ள மைலதன்னை என்ற கிராமத்தில் 35 தமிழர்களைப் படுகொலை செய்தது மற்றும் பலருக்கு காயம் விளைவித்தது தொடர்பாக 21 சிப்பாய்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை சிங்களம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் ஓகஸ்ட் 24 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளது.

இவ்வழக்கில் கிழக்கு மாகாணத்திலுள்ள புனானைப் பிரதேசத்திலுள்ள மைலதன்னை என்ற கிராமத்தில் அத்துமீறிப் பிரவேசித்து 35 தமிழ் மக்களைக் கொன்றதாகவும் —

பலருக்குக் காயம் விளைவித்ததாகவும் —

தமிழ் மக்களின் வீடுகள் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும் — 21 இராணுவச் சிப்பாய்களுக்கும் எதிராக சட்டமா அதிபரால் 85 குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. (இ-10)

## ஓட்டோ சாரதி நேற்று விடுவிக்கப்பட்டார்!

மட்டக்களப்பு, மார்ச் 27

திருகோணமலையில் புளொட் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஓட்டோ சாரதி ரி. விஜயகுமார் நேற்று பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் தற்போது வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் கைது செய்யப்பட்ட புளொட் உறுப்பினர்கள் மூவர் நேற்று திருகோணமலை பதில் நீதிபதி சுபாஷினி சித்திரவேல் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(இ-21)

### 8 அப்பாவி...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்களில் வள்ளிப்பிள்ளையும், செல்லம்மாவும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

செல்லம்மாவின் உடல் மரத்தில் தொங்கிக்கிடந்தது. அவரது ஆடையில் இருந்தே அவர் அடையாளம் காணப்பட்டார்.

கண்ணபுரம் வைத்திய சாலைக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த சமயம் பாலசிங்கம், யாழினி ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த குண்டுத் தாக்குதலின்போது பெரியகுளம் பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

இரு உழவுஇயந்திரங்களும் சேதமடைந்தன.

வட்டக்கச்சியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

★ வீரையா செல்வராசா (40 வயது)

★ பஞ்சலிங்கம் பாமினி (29 வயது)

★ கதிர்காமு ராஜேஸ்வரி (26 வயது)-முரசுமோட்டை.

★ இராமநாதன் தேவகி (21 வயது)-முரசுமோட்டை.

★ சி. சிவகுமார்(26 வயது).

அதேசமயம் பரந்தனுக்குக் கிழக்கே உள்ள வட்டக்கச்சி என்னும் இடத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி முகாம் ஒன்றை விமானப் படையினர் நேற்றுக் குண்டு வீசி அழித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டு வீச்சின் போது அம்முகாமில் இருந்த ஓலைக் குடிசைகளும், சில வாகனங்களும் முற்றாக அழித்து விட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (இ-164-3-7)

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தியத் தூதுவரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

இது குறித்து உடன் நடவடிக்கை எடுப்பதாக இந்தியத் தூதுவர் உறுதி கூறியதாக இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.

அதே நேரம் — அகில இலங்கை இந்து மாமன்றம் இந்தியாவின் புதிய பிரதமர் வாஜ்பாய்க்கு 'பக்ஸ்'செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ... தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## வடக்கு-கிழக்கு மாகாண கல்வி நிர்வாகத் திட்டம்

### மே முதல் நடைமுறைக்கு

திருகோணமலை, மார்ச் 27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வலய கல்வி நிர்வாகத் திட்டம் மே மாதம் முதல் நடைமுறைக்கு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

வலயத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணக்கல்வியமைச்சு அதிகாரிகள் கொண்ட மாநாடு ஒன்றை கல்வியமைச்சர் ரிச்சர்ட் பத்திரான மாத ஆரம்பத்தில் கூட்டியிருந்தார்.

இந்த மாநாட்டையடுத்து புதிய வலயத் திட்டம் மே மாதம் முதலாம் திகதி முதல் அமுல் செய்யப்படவிருப்பதாக மாகாணக் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமுமாகிய எம். எம். ஒபடகே இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுவரும் இவருடன் அதிகார சபை பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஓய்வுபெற்ற நீதியரசர் சி. பாலகிட்ணர், சி. மாலியத்த, பாஸி முகைதீன் ஆகியோரும் வருகின்றனர்.

இன்று காலை பலாலி வரும் இவர்கள் வடமாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் பேச்சு நடத்துவர்.

அதன்பின் யாழ். செயலகத்தில் நடைபெறும் திணைக்களத் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவர். (இ-3)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்ற இடத்தில் படையினரின் டிரக் ஒன்று நின்றதாகவும் —

அந்த இலக்குத் தவறி கிரனேட் உருண்டு சென்று ப. நோ. கூ. சங்க லொறி ஒன்றின் கீழ் வெடித்ததாகவும்—

இதனாலேயே உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டதாகவும் தெவிக்கப்பட்டது.

கிரனேட் வீச்சு சம்பவம் இடம் பெற்றவுடன் படையினர் அப்பகுதிக்கு விரைந்து வந்துஅப்பகுதியில்சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைதாகவில்லை.

(இ-15-9-109-139)

## மக்களவையில் கூச்சல் குழப்பம்

புதுடில்லி, மார்ச் 27

ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி தங்களுக்குத் தேவையான பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கட்சித்தாவலை ஊக்குவிப்பதாக பகுஜன் சமாஜக் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து இந்திய மக்களவையில் நேற்று 80 நிமிட நேரம் கூச்சலும், குழப்பமும் நிலவின.

தொடர்ந்து பேசிய இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இக்குற்றச்சாட்டுகளை வன்மையாகக் கண்டித்தார்.

இன்று நடைபெறவிருக்கும் நம்பிக்கை தீர்மானத்தின் விவாதத்தின் போது பகுஜன் சமாஜக் கட்சி உறுப்பினர்கள் தாங்கள் கூறும் குற்றச் சாட்டுக்களை நிரூபிக்கும் சான்றுகளை வழங்க வேண்டும் என்றும் வாஜ்பாய் கேட்டுக் கொண்டார். (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.